மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கோவில்பட்டி

அ.வ.எண்.184 /2018

வாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் வா.சா.1.

---

பெயர். - திரு.முருகன்
த/பெ. - திரு.கோட்டமுத்து
கிராமம் - ஆலம்பட்டி
தொழில் - விவசாயம்
தாலுகா - கோவில்பட்டி
வயது - 47.

1872-ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி 2026-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 23-ஆம் நாள் இந்நீதிமன்ற உதவியாளரால் சத்தியப்பிரமாண வாக்குமூலம் செய்யப்பட்டு, நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு, ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

முதல் விசாரணை.-

1) நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதை வாதிகள் தரப்பில் ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

| | |
|---|---|
| 1 | 28.09.2007 ம் தேதியிட்ட வாதியின் தம்பி சண்முகராஜ் பெயரில் உள்ள கிரையப்பத்திரத்தின் அசல் 10 தாள்கள் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 2 | 23.03.2015 ம் தேதியிட்ட வாதி பெயரில் உள்ள தானசெட்டில்மெண்ட் பத்திரம் அசல் 11 தாள்கள் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 3 | வீட்டுத்தீர்வை ரசீது எண்ணம் 1 சண்முகராஜ் பெயரில் உள்ளது வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 4 | வாதி பெயரில் உள்ள வீட்டுத் தீர்வை ரசீது எண்ணம் 1 வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 5 | உத்தேச பிராது வரைபடம் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |

பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை - வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறுதேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
23.03.2025.